Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723
(Online) Peer Reviewed Multidisciplinary Monthly International Journal
Vol. 1 No. 06 (2025): Tamilmanam March 2025

# The Struggles of Marginalized Communities: A Study Based on the Novel "Sengai"

**Dr. E. Bergmans**

(Guide) Assistant Professor, Department of Tamil Liretature, Annamalai University, Annamalainagar.

**S. Arivazhagan**

Ph.D. Research Scholar, Department of Tamil Literature, Annamalai University, Annamalainagar.

## Abstract:

Studies concerning marginalized communities initially originated in Western countries and subsequently found their way into the field of Indian Tamil social research. Consequently, research on marginalized people has emerged as a significant branch of modern study in Tamil. Human society is fragmented by numerous factors such as caste, religion, ethnicity, profession, economy, and language. Among these, the caste problem has persisted throughout history. Lower-caste people endure countless hardships and burdens in their lives. Kavipiththan is uniquely skilled at portraying the complexities of life within society through his novels. This article explores how marginalized people suffer in their lives within his novel "Sengai," focusing on themes such as poverty, capitalism, caste, power, the lives of laborers, and the challenges faced by drivers.

**Keywords**: Sengai, caste, religion, ethnicity, profession, economy, language

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723
(Online) Peer Reviewed Multidisciplinary Monthly International Journal
Vol. 1 No. 06 (2025): Tamilmanam March 2025

# விளிம்புநிலை மக்களின் வாழ்வியல் போராட்டங்கள் (சேங்கை நாவலை முன்வைத்து)

**முனைவர் இயே. பெர்க்மான்ஸ்,**
(நெறியாளர்) உதவிப்பேராசிரியர், தமிழியல்துறை அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்

**ச. அறிவழகன்**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

## முன்னுரை

விளிம்பு நிலை மக்களைப் பற்றி ஆய்வுகள் மேல்நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு பிறகு இந்தியத் தமிழ் ஆய்வுப் புலத்திற்கு வருகின்றன. இவ்வடிப்படையில் தமிழிலும் விளிம்புநிலை மக்களைப் பற்றிய ஆய்வு நவீன ஆய்வின் ஒரு பிரிவாகத் தோற்றம் பெறுகிறது. மனித சமூகம், சாதி, மதம், இனம், தொழில், பொருளாதாரம், மொழி போன்றவற்றால் பிளவுப்பட்டுக் கிடக்கின்றது. இதில் சாதிப்பிரச்சனை காலங்காலமாகத் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் ஏராளமான துன்பங்களையும், சுமைகளையும் பொறுத்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். சமுதாயத்தில் ஏற்படும் வாழ்வியல் சிக்கல்களை கதைப்போக்கில் நாவல்களாக வெளிப்படுத்தி வருபவர்களில் கவிப்பித்தன் தனித்திறம் பெற்றுத் திகழ்பவர். இவருடைய சேங்கை என்ற நாவலில் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் வாழ்வில் எவ்வாறெல்லாம் அவதிப்படுகின்றனர் என்பதை முன்னுரையை தொடர்ந்து வறுமை, முதலாளித்துவம், சாதி, அதிகாரம், தொழிலாளிகளின் வாழ்வு. ஓட்டுநர்களின் சிக்கல் என்ற தலைப்புகளின் வழி இக்கட்டுரை நகர்கின்றது.

## விளிம்பு நிலை விளக்கம்

விளிம்பு நிலை என்ற சொல் இலக்கிய வட்டத்தில் அதிகம் பேசப்படுகின்ற விளிம்புநிலை என்ற சொல்லை மையம், ஓரம் என இருவகைப்படுத்தலாம். சாதி, மதம், தொழில், பொருளாதார ரீதியாக முன்னேரியவர்கள் மேல்தட்டு மையம் எனவும் பொருள் கொள்ளலாம்.

“விளிம்பு நிலை என்பது சமூக அந்தஸ்துகள் அல்லது வாழ்க்கை ஓட்டத்தில் பின்தங்கியவர்கள் என்று அர்த்தப்படுகின்றன. விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கை என்பது எப்போது வேண்டுமானாலும் தடம் புரளலாம். பாதுகாப்பற்ற சமூக மதிப்பில்லாத ஒரு வாழ்வியலேயே விளிம்புநிலை சித்தரிக்கின்றது.

கீழ்த்தட்டு மக்கள் என்றாலே ஒடுக்கப்பட்டவர்கள் என்றே பொருள். விளிம்பு நிலை மக்கள் ஆளுமைக் குறைபாடு கொண்டவர்கள் தங்களுடைய தினசரி வாழ்க்கை. அழுத்தத்தை தாங்க இயலாமல் உணர்வுகளை மிகுதியாக வெளிப்படுத்துவார்கள். இதனால் அவர்களுடைய உள் மற்றும் வெளி உலகில் மிகுந்த அழுத்தமும் குழப்பமும் ஏற்படுகின்றது.

## விளிம்பு நிலை மக்கள்

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723
(Online) Peer Reviewed Multidisciplinary Monthly International Journal
Vol. 1 No. 06 (2025): Tamilmanam March 2025

விளிம்புநிலை மக்கள் என்று குறிப்பிடும் மக்கள் சமூகத்தில் எந்தவிதமான அங்கீகாரமும் இல்லாதவர்கள் தங்களுடைய உரிமைக்காகப் போராடுபவர்கள் தற்போது இருக்கின்ற நிலையைத் தக்கவைத்துக் கொள்வதில் அந்த மக்கள் மிகுந்த கவனமாக இருக்கின்றனர்.

வருவாய் குன்றிய பல தொழில்களைச் செய்யும் மக்கள். புறக்கணிக்கப்பட்ட மக்கள, ஒடுக்கப்பட்ட மக்கள் ஆகியோர் விளிம்பு நிலை மக்கள் ஆவார். இதனைச் சமுதாய அடுக்கில் கீழ்நிலையில் விளிம்பில் ஓரத்தில் இருப்பவர்களையே அதாவது சாதி, சமயம், பால், இனம் என்ற எல்லாத் தளங்களிலும் ஒடுக்கப்பட்ட புறக்கணிக்கப்பட்ட தாழ் நிலைக்குத் தள்ளப்பட்ட மக்கள் தேவதாசிகள், பாலியல் தொழிலாளிகள், அரவாணிகள், தொழு நோயாளிகள், ஆதரவற்றவர்கள். மாற்றுத் திறனாளிகள் முதலானோர் விளிம்புநிலை மாந்தர்கள் என அழைக்கப்படுவார்கள்.

அம்மக்களின் வாழ்க்கை தினம் தினம் செத்துப் பிறப்பது போன்றே அமைகின்றது. அன்றாடத் தேவையான உணவிற்குப் பெரும் உழைப்பினைக் கொடுத்தாலும் அதற்கான ஊதியம் கிடைப்பதில்லை. தொழில் நிலையில் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகள் அவர்களது மனநிலையைச் சிதைத்து குழப்பமான சூழலை உருவாக்குகின்றன.

விளிம்புநிலை மக்களின் வாழ்க்கையில் ஆசைகள், கனவுகள் போன்றவை கானல் நீராய் அமைகின்றன.

**வறுமை**

வறுமை என்பது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையே ஆகும். தனது அன்றாட தேவைகளான உணவு, உடை, உறைவிடம் போன்ற குறைந்தளவு தேவைகளை கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாத ஒரு நிலையே வறுமையாகும்.

உலகளாவிய ரீதியில் வறுமையானது நாட்டு மக்களின் கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, சூழல் போன்ற வாழ்வாதாரங்களை பாதித்து தனிமனித விழுமியங்களை சிதைப்பதுடன் குடும்பங்களையும் சமூகங்களையும் சீர்குலைத்து நிற்கின்றது.

வறுமை என்பது மிகவும் கொடியது என்பதை மேனாட்டு அறிஞர் பெர்னார்ட்ஷா பின்வருமாறு கூறுகின்றார்.

**"வறுமையே தீமையிற் தீமையும் குற்றத்திற்**
**கொடியதுமாகும்"**

இவ்வாறு வறுமையின் கொடுமையை கூறியுள்ளார்.

கவிப்பித்தன் சேங்கை நாவலில் குன்டிவாடன் என்னும் பாத்திரத்தின் குடும்ப வறுமையை எடுத்துரைத்துள்ளார்.

"குன்டிவாடன் ஊர் மக்களுக்கு செருப்பு தைத்தல், நீர் இறைக்கும் சால் தைத்தல் போன்ற வேலைகளை செய்து வந்தார். குன்டிவாடன் இறந்த பிறகு அவருடைய குடும்பம் வறுமை

நிலைக்கு தள்ளப்பட்டது. குன்டிவாடனின் தம்பி பெத்தாவடனின் குடும்பத்தையும் குன்டிவாடன்தான் பார்த்து வந்தான்."

குன்டிவாடன் இறந்த பிறகு அவரின் குடும்பத்தில் யாரும் தோல் வாங்கி விற்பதும் இல்லை, சால் தைப்பதும் கிடையாது. ஊரில் அவரின் குடும்பத்திற்கு வேறு எந்த வேலையும் கிடையாது. ஊரார் அறுவடையின்போது அவர்களுக்கு கொடுக்கும் மேரையும் இப்போது கொடுப்பதில்லை. அவரின் குடும்பத்தில் இருந்த ஆண்கள் கூலி வேலைக்கும் பெண்களும் சிறுவர்களும் துடைப்பம் அறுத்தும் விற்றனர்.

குன்டிவாடன் குடும்பத்தினர் எப்போதும் போலவே ஊரில் களி, கூழ் வாங்குவதற்கு வீடு வீடாக சென்று நிற்பார்கள். அப்படி ஊர் களி வாங்க செல்லும் போது சில வீடுகளில் ஏளனமாக பேசுவார்கள்.

**"ஏங் எதுனா வேல செஞ்சி ஆக்கி துன்றது இப்படி வர்சி வர்சியா குண்டான தூக்கினு வந்தா ஆக்கறத உங்களுக்கே போட்டுட்டு நாங்க இன்னாத்த துன்றது" (சேங்கை. ப. 250)**

என்று பேசி களியை சலிப்புடன் கொடுத்து அனுப்புவார்கள். வறுமையின் காரணமாக இவ்வாறான ஏளன பேச்சிக்கு விளிம்புநிலை மக்கள் தள்ளப்படுவதை இந்த செய்தி மூலம் பதிவு செய்துள்ளார். கவிப்பித்தன்.

**முதலாளியின் ஏளனப் பேச்சு**

முதலாளி என்பவர் ஊழியர்களை வேலைக்கு அமர்த்தும் மற்றும் அவர்களின் உழைப்புக்கு ஊதியம் வழங்கும் அதிகாரம் படைத்தவர் ஆவார்.

முதலாளிக்கும் அவரது ஊழியர்களுக்கும இடையிலான விதிமுறைகளை வரையறுத்து ஒப்பந்தத்தை எழுதும் கட்சியாகும். இவ்வாறான முதலாளிகள் தன்னிடம் பணி செய்யும் ஊழியர்களை தகுந்த மரியாதையுடனும் சமமான மதிப்புடனும் நடத்துவது கிடையாது. அவர்களை இழிவாக பேசுவது தரைகுறைவாக நடத்துதல் போன்றவை இன்றளவும் சமுதாயத்தில் நிலவிக் கொண்டுதான் இருக்கின்றது.

தொழிலாளரின் நிலையினை பாரதிதாசன் பின்வருமாறு கூறுகின்றார்.

**"கந்தை அணிந்தோம் இரு**
**கையே விரித்தெங்கள் மெய்யினைப்**
**போர்த்தோம் மொந்தையிற் கூழைப்**
**பலர் மொய்த்துக் குடித்துப் பசித்து கிடந்தோம்"**

இந்த பாடலின் மூலம் தொழிலாளரின் துயரங்களை எடுத்துக் கூறியுள்ளார்.

கவிப்பித்தன் சேங்கை நாவலில் முதலாளி தனது பணியாளரை இழிவாக பேசும் செய்தியினை பதிவு செய்துள்ளார்.

மணி ஒரு படித்த இளைஞன் அவன் தனது குடும்ப வறுமை நிலையின் காரணமாக பாவனா டிரான்ஸ்போர்ட் என்னும் லாரி நிறுவனத்தில் லோடிங் கிளர்க் வேலை செய்து வந்தான். ஒரு நாள்

லாரி நிறுவனத்திற்கு சேர வேண்டிய பணத்தை வங்கிக்கு சென்று எடுத்துவரும் படி கூறி மேலாளர் மணியை அனுப்பி வைத்தார். அந்த பாவனா நிறுவனம் தர வேண்டிய கடன் தொகையை வசூல் செய்ய வந்த கோபு என்ற நபர் இந்த பணத்தை என்னிடம் கொடுக்குமாறு மேலாளர் மாதவன் கூறினார் என்று பொய் சொல்லி மணியிடம் இருந்து கோபு பணத்தை வாங்கிக் கொண்டு சென்று விட்டார். அந்த செய்தியைக் கேட்ட பாவனா நிறுவனத்தின் முதலாளி மணியை,

**“ஏம்பா படிச்சிருக்கியே அறிவில்ல? உனக்குச் சம்பளம் குடுக்கறது நானா அந்த தெலுங்குக்காரனா?”**

என்று கோபமாக திட்டினார். மணி அந்த செயலுக்கு மன்னிப்பு கேட்டதற்கு,

**“போன வைய்டா முண்டம் உன்ன நேர்ல வந்து பேசிக்கிறங்” (சே. 305)**

என்று மணியை இழிவாக பேசினார்.

இந்த செய்தியின் மூலம் பணியாளர்களை முதலாளிகள் இழிவாக பேசும் நிலை நிலவுகின்றது என்பதை பதிவு செய்துள்ளார் கவிப்பித்தன்.

**சாதியின் அடிப்படையில் இழிவுப்படுத்துதல்**

சாதி என்பது ஒரு பொருளாதார நிலை தொழில் அல்லது அந்தஸ்தில் உள்ளவர்களை உள்ளடக்கிய ஒரு சமூக குழுவாகும்.

சாதி அமைப்புகள் சமூக மற்றும் பொருளாதார நிர்வாகத்தின் ஒரு வடிவமாகும். இது கொள்கைகள் மற்றும் வழக்கமான விதிகளை அடிப்படையாகக் கொண்டது. இது சமூக (சாதிகள்) மக்களைப் பிரிப்பதை உள்ளடக்குகிறது.

சாதி என்பது இந்தியாவில் ஒரு நபரின் தொழில் மற்றும் பிறப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக படிநிலையாகும்.

சாதி வேறுபாடு பார்த்தல் கூடாது, அனைவரும் சகோதரத்துவம் கொண்டு விளங்க வேண்டும் என்பதை பாவேந்தர் பாரதிதாசன் பின்வருமாறு கூறுகின்றார்.

**“மாந்தரில் சாதி வகுப்பது சரியா?
மக்கள் ஒரேகுலமாய் வாழ்வது சரியா?”**

என்று சமூகத்தை பார்த்து சாதி பார்த்தல் சரியா? என்ற கேள்வியை கேட்டவாறு கவிதை பாடியுள்ளார்.

கவிப்பித்தன் சேங்கை நாவலில் சாதி வேறுபாடு பார்த்து சுந்தர் என்ற பாத்திரத்தை படிக்கவிடாமல் செய்வதும் அவன் பேண்டு சட்டை போட்டுக் கொண்டு வேலைக்கு செல்வதை ஊர் மக்கள் இழிவாக பேசும் செய்தியினை பதிவு செய்துள்ளார்.

குன்டிவாடன் தனது சொந்த ஊரை விட்டுவிட்டு பஞ்சம் பிழைக்க வந்தவர். அவருடைய மகன் சுந்தர் அவன் தனது பள்ளிப் படிப்பை ஊள்ளூர் பள்ளியில் முடித்துவிட்டு கல்லூரி வெளியூர்

சென்று படித்தான். அவன் படித்த உள்ளூர் பள்ளியல் சுந்தரை படிக்க விடாமல் அந்த ஊர் உயர் சாதி பிள்ளைகள் துன்பப்படுத்தினர். அவை அனைத்தையும் தாண்டி கல்லூரி படிப்பு வரை சென்று கல்லூரி படிப்பை முடித்துவிட்டு பாவனா டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தான். சுந்தர் பேண்டு சட்டை அணிந்து வேலைக்குச் செல்வதை பார்த்த ஊர் மக்கள்,

**“த்ரா குன்ட்டிவாடம்புள்ளயப் பார்ரா வெள்ளக்கார தொர மாதிரி பேண்டு செர்டு பட்ச்சி பெரிய கலக்ட்ராயி வந்துர்ரா நாங்கள்லாம் மனு குடுக்க உங்கூட்டு வாசல்ல வந்து நிக்கறம்” (சே. ப. 251)**

என்று ஏளனமாக சிரிப்பார்கள். இந்த செய்தி மூலம் உயர் சாதி வர்க்கத்தினர் தாழ்த்தப்பட்ட மக்களை இழிவாக பேசும் நிலை சமுதாயத்தில் இருப்பதை எடுத்துரைத்துள்ளார் கவிப்பித்தன்.

**அதிகார வர்க்கத்தினரின் ஆணவப் பேச்சு**

ஒரு சமூகத்தில் அரசியல் பொருளாதார சமய கல்வி சமூக ஊடகவியல் முனைகளில் ஆதிக்கம் அல்லது அதிகாரம் செலுத்தும் மக்கள் குழு அதிகார வர்க்கம் என அழைக்கப்படும்.

கவிப்பித்தன் அதிகார வர்க்கத்தின் ஆணவப் போக்கை குமார் என்னும் ஓட்டுனரை வைத்து சேங்கை நாவலில் பதிவு செய்துள்ளார்.

குமார் பாவனா டிரான்ஸ்போர்ட்டில் ஓட்டுனராக பணிபுரிந்து வந்தான். ஒரு நாள் வேலூரில் இருந்து பம்பாய்க்கு லோடு ஏற்றி செல்ல வேண்டியிருந்தது. குமார் லோடு ஏற்றிக்கொண்டு பம்பாய்க்கு சென்று ஆறு மாதம் ஆன பிறகும் திரும்பி வரவில்லை. தனது கணவனை கண்டுப்பிடித்து தருமாறு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தால் குமார் மனைவி வள்ளி. அதனை ஏற்காமல் காவல் துறையினர் நிராகரித்து வந்தன. பாவனா டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தாரும் குமார் எங்கள் லோடையும் லாரியையும் திருடி சென்று விட்டான் என்று புகார் கொடுத்தனர். குமார் லோடு ஏற்றி சென்ற போது கடைசியாக வீட்டிற்கு வந்து சென்றான். அதனை காரணமாக வைத்து வள்ளியை மிரட்டி வந்தனர் காவல் துறையினர். உன் கிட்ட கடைசியா என்ன சொல்லிட்டு போனான் சொல்லு என்றார் ஒரு காவலர்.

**“சார் அவரு எங்க போனாரு இன்ன ஆனாருனு தெரியாம ராவும் பகலும் தூக்கந் தண்ணி இல்லாமல் தவிச்சிகினுகிறம் சார் மெய்யாலுமே அவரு வேற ஒன்னும் சொல்லல சார்”**
**(சே. ப. 266)**

என்று வள்ளி தனது வேதனையை காவலரிடம் சொல்லியும் அவர் வள்ளியை தொல்லை செய்து வந்தார்.

இந்த செய்தியின் மூலம் ஏழை மக்களின் மீது அதிகார வர்க்கத்தினரின் ஆதிக்கத்தை அறியமுடிகிறது.

**தொழிலாளியை ஏமாற்றுதல்**

தொழிலாளி என்பவர்கள் உடலுழைப்பு வகையில் அடங்குவார்கள். குறிப்பாக கட்டுமானம் மற்றும் தொழிற்சாலைத் தொழில்களில் வேலை செய்பவர்களாக உள்ளனர். உழைப்பாளிகள் கூலி சம்பாதிக்கும் ஒரு தொழிலாளி வர்க்கத்தில் உள்ளனர். அதில் அவர்களின் குறிப்பிடத்தக்க பொருள் மதிப்பு அவர்களின் உழைப்பு மட்டுமே.

அறிஞர் அண்ணா அவர்கள் தொழிலாளி என்பவர் யார் என்பதை பின்வருமாறு கூறுகின்றார்.

**“உருண்டோடுகிற ரயிலை ஓட்டுபவன் யார்? தொழிலாளி! வானத்தில் ஒய்யாரமாக பறக்கும் விமானத்தை ஓட்டுபவன் யார்? தொழிலாளி! இழையை நூற்று நல்லாடை செய்பவன் யார்! தொழிலாளி! இரும்பை காய்ச்சி உருக்கபவன் யார்? தொழிலாளி!”**

என்று ஊதியத்திற்கு உழைக்கும் அனைத்து மக்களுமே தொழிலாளிகள் தான் என்று தொழிலாளர்களைப் பற்றி கூறுகின்றார்.

கவிப்பித்தன் சேங்கை நாவலில் தொழிலாளர் நிலையினையும் தொழிலாளர் ஏமாற்றத்தையும் எடுத்துக் கூறியுள்ளார்.

சுந்தரின் அக்கா சந்திரா அவளின் கணவன் ஒரு தோல் தொழிற்சாலையில் இரவு நேர காவலாளியாக பணிபுரிந்து வந்தார். கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளாக அந்த தொழிற்சாலையில் பணியாற்றி வந்தார். எப்போதும் போல வழக்கமாக பணிக்கு சென்ற அவர் மறுநாள் பிணமாக தொழிற்சாலை பிரதான வாயிலில் கிடந்தார். அவர் இறப்பிற்கு காரணம் என்ன என்று கேட்ட போது மாரடைப்பால் இறந்திருக்கலாம் என கூறினர். ஒரு வெள்ளை துணியில் கட்டிக் கொண்டு வந்து போட்டு விட்டு சென்றனர். இத்தனை ஆண்டுகள் பணிபுரிந்ததுக்கு தொழிற்சாலை நிறுவாகத்திடம் நஷ்ட ஈடுக் கேட்டபோது,

**“மாரடைப்பு வந்து தானாக செத்ததற்கு என்ன இழப்பீடு வழங்க முடியம்” (சே. ப. 286)**

என்று நஷ்ட ஈடு வழங்காமல் ஏமாற்றி விட்டன.

இந்த செய்தி மூலம் தொழிலாளர்கள் எவ்வாறு ஏமாற்றப்படுகின்றன என்பதை வெளிக்காட்டியுள்ளார் கவிப்பித்தன்.

**ஓட்டுநர்களை இழிவாக பேசுதல்**

காலம் இயங்குகிறது என்பது பூமி சுழற்சியை மட்டும் கணக்கில் கொள்வது அல்ல. உலகம் இயங்குவதற்கு மக்களின் அன்றாட தேவைகளுக்கு சரக்கு பொருட்களை மக்களுக்காக ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இடம் பெயர்வதற்கு வாகன போக்குவரத்து தேவை. அந்த வாகனங்களை இயக்குவதற்கு ஓட்டுநர்களின் பங்கு தலைசிறந்த ஒன்றாக உள்ளது. தன் உயிரையும் ஒரு பொருட்டாக கருதாத ஓட்டுநர்களை இழிவாக பேசும் அவலம் சமுதாயத்தில் நடைப்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது.

திருவள்ளுவர் எவரையும் அவரது பணிக்கொண்டும் பொருளாதாரத்தைக் கொண்டும் இழிவாக பேசக்கூடாது என்பதை,

**“உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு**

**அச்சாணி அன்னார் உடைத்து" (குறள். 667)**

இக்குறள் மூலம் எடுத்துரைத்துள்ளார்.

கவிப்பித்தன் சேங்கை நாவலில் லாரி ஓட்டும் ஓட்டுநர்களையும் அவர்களுடைய துயரங்களையும் வெளிக்காட்டியுள்ளார். ஒட்டுனர்களை எவ்வாறு இழிவாக பேசுகின்றனர் என்பதையம் கூறியுள்ளார்.

லோகு என்பவன் பாவனா டிரான்ஸ்போர்ட்டில் ஓட்டுநராக பணிபுரிந்து வந்தான். குஜராத்தில் இருந்து ராணிப்பேட்டைக்கு லோடு ஏற்றிக்கொண்டு பெங்களூர் சாலையில் வந்துக்கொண்டிருந்த போது வழிப்பறி கொள்ளையர்கள் லாரியில் ஏறின. கழுத்தில் கத்தியை வைத்து அவனிடம் இருந்த பணத்தை பிடுங்கிக் கொண்டு சென்றனர். இந்த செய்தியை டிரான்ஸ்போர்ட் மேலாளர் மாதவனிடம் சொன்ன போது,

**"டே தா**ளி உன்ன பத்தி எனக்கு தெரியாதா எந்த கூத்தியாருக்கிட்ட பணத்தை உட்டுட்டு திருடன் புடுங்கிட்டானு இங்க வந்து புருடா உட்ற?" (சே. 179)**

என லோகுவை நம்பாமல் திட்டினார். அருகில் இருந்த மணி என்ற சூப்பர்வைசரிடம்,

**"டிரைவருங்களப் பத்தி உனக்கு சரியா தெரியாது. மணி ஏமாந்தா லாரி சக்கரத்தயே கழட்டி வித்துட்டு காக்கா தூக்கினு போய்ட்ச்சினு கூசாம வந்து நிப்பாங்க" (சே. ப. 184)**

என்று ஓட்டுனர்களை இழிவாக கூறினார்.

இந்த செய்தி மூலம் ஓட்டுனர்களை எவ்வாறு சமுதாயத்தில் ஏளனம் செய்கின்றன என்பதை அறியமுடிகிறது.

## முடிவுரை

சமுதாய அமைப்பில் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் எண்ணற்ற சிக்கல்கள் ஏற்படுகின்றன. அவர்கள் அன்றாட வாழ்க்கையை வாழவே பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. சாதியாலும், தொழிலாலும், பொருளாதார நிலையினாலும் மிகவும் பின்தள்ளப்பட்டு சமுதாயத்தில் ஒரு ஒதுக்கப்பட்ட மனிதர்களாகவே தங்களது வாழ்க்கையை நகர்த்தி செல்கின்றன. இவ்வாறு இந்த விளிம்புநிலை மக்களை இந்த சமுதாயம் எவ்வாறெல்லாம் ஒதுக்குகின்றனர். அந்த ஒடுக்குமுறையினால் அவர்களுக்கு ஏற்படும் துன்பங்களை சேங்கை நாவலின் வழி கவிப்பித்தன் அழகுற எடுத்தியம்புகிறார்.

## முதன்மை ஆதாரம்

கவிப்பித்தன். **சேங்கை.** நீலம் பப்ளிகேஷன்ஸ் சென்னை. முதற்பதிப்பு-2023

## துணைமை ஆதாரங்கள்

முல்லை முத்தையா. **பேரறிஞர் பெர்னாட்ஷா** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் -2010
தொ. பரமசிவன். **பாரதிதாசன் பாடல்கள்.** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். எட்டாம் பதிப்பு-2009
மூர்த்தி. அ.கி., **அண்ணாவின் மேடைத்தமிழ்,** மணிவாசகர் பதிப்பகம். முதற்பதிப்பு-1997

வரதராஜன். ஜி., **திருக்குறள் உரை விளக்கம்,** பழனியப்பா பிரதர்ஸ், முதற்பதிப்பு-2021

**References**

Kavippiththan. Sengai. Neelam Publications, Chennai. First Edition – 2023

Mullai Muthaiah. *Perarignar Bernard Shaw* (The Great Scholar Bernard Shaw). New Century Book House - 2010.

Tho. Paramasivan. *Bharathidasan Paadalgal* (Bharathidasan's Songs). New Century Book House. Eighth Edition - 2009.

Moorthy, A.K. *Anna'vin Medai Thamizh* (Anna's Oratorical Tamil). Manivasagar Pathippagam. First Edition - 1997.

Varadarajan, G. *Thirukkural Urai Vilakkam* (Commentary and Explanation of Thirukkural). Pazhaniappa Brothers. First Edition - 2021.